00183

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் V

இறுதிப் பரீட்சை - 2021/2022

**LLU5810/LWU3312 – காணிச்சட்டம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலம்

திகதி: 17.01.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "உரித்து தொடர்பான விளம்பல் ஒன்றை கோரும் திறத்திற்கு உரிய உரித்து இருத்தல் வேண்டும் என்பது தொடர்பாக ஏராளமான அதிகாரங்கள் உண்டு. உரித்து நிறுவல் வழக்கு நடவடிக்கை *(Rei vindicatio)* ஒன்றைக் கொண்டுவரும் வழக்காளி அவரிடம் அளிக்கப்பட்டுள்ள உண்மையான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.... பிணக்கிற்குரிய ஆதனத்திற்கு தன்க்கு உரித்துள்ளது என்பதை வழக்காளி காண்பித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு காண்பிக்க இயலாதுவிடில் வழக்கு நடவடிக்கை ஒன்று எழாது என்பது தொடர்பில் ஒன்றுபடுகின்ற ஆதாரங்கள் உள்ளன."

Macdonell C.J உடைய கருத்தின் பிரகாரம்

*De Silva* v.*Goonetileke* 32NLR 217,219.

இலங்கையில் உரித்து நிறுவல் வழக்கு நடவடிக்கை, தொடர்பில் சொந்தம் என்ற எண்ணக்கருவின் பிரயோகத்தின் சரியான நிலைமையை மேலே தரப்பட்டுள்ள கூற்று பிரதிபலிக்கின்றதா? விமர்சித்து ஆராய்க.

உமது விடையை பொருத்தமான தீர்ப்புச் சட்டத்துடன் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

வினாக்கள் இல.2,3,4 மற்றும் 5 என்பன கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டன.

ஹரி என்பவர் கேகாலையில் வர்த்தகத்தை நடத்திவருகின்ற ஒரு வெற்றிகரமான வர்த்தகர் ஆவார். அவர் 1979 ம் ஆண்டு விற்பனை உறுதி ஒன்றின் மூலமாக 8 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட பொல்வத்தை என விபரிக்கப்படும் காணியின் உரிமையாளரானார். பொல்வத்தையின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதி இறப்பர் தோட்டமாகும். 2015 ஆம் ஆண்டில் அவர் இறந்த போது அவருக்கு இரண்டு மகள்மாரும் இரண்டு மகன்மாரும் இருந்தனர். அவர்கள் முறையே லிலி, கினி, எல்பஸ் மற்றும் செவருஸ் ஆவர். அவர் இறப்பதற்கு 30 வருடங்களுக்கு முன் அவரது சொந்த இடமான கண்டிக்கு திரும்பச் சென்றதுடன் கேகாலையில் உள்ள காணியின் முகாமைத்துவத்தை எல்பஸ் எனும் முதலாவது மகனிடம் கையளித்தார். 2010 ஆம் ஆண்டு மே மாதம் அதாவது அவருடைய இறப்புக்கு ஐந்து வருடங்களுக்கு முன் செவருஸ் ஆகிய இரண்டாவது மகனிடம் கேகாலை மாவட்டத்தில் உள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா ஆதனங்களை கையாள்வதற்குரிய அற்றோணித் தத்துவத்தை வழங்கினார். ஹரி 2014 ம் ஆண்டு மே மாதம் லிலிக்கு பொல்வத்தை காணியின் 1/10 பகுதியை கொடையுறுதி (D1) மூலம் கொடையளித்தார். சில காரணங்களுக்காக அவர் 2014 ம் ஆண்டு யூன் மாதம் அதே பிரிபடாத பொல்வத்தை காணிப்பகுதியின் மீது மினேராவிற்கு கைமாற்ற உறுதி ஒன்றை (D 2) நிறைவேற்றினார்.

அற்றோணித் தத்துவத்தை நிறைவேற்றிய பின்பு செவருஸ் பொல்வத்தைக்குள் உட்பிரவேசித்து வீடு ஒன்றையும் சரக்கு இருப்பு கட்டடம் ஒன்றையும் கட்டியதுடன் பலத்த மழையின் காரணமாக காணியில் ஏற்படும் மண் அரிப்பை தடுப்பதற்காக இரண்டு பெரிய குழிகளைத் தோண்டினார். வீடு மற்றும் சரக்கிருப்பு கட்டடம் ஆகிய இரண்டும் இறப்பர் விரிப்புக்களை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. இறப்பர் விரிப்புக்களில் இருந்து பெறப்பட்ட இலாபத்தை செவருஸ் அவருடைய சகோதர சகோதரிகளுடன் பங்கிட்டுக்கொண்டார் என்பது தொடர்பில் எவ்வித சான்றுகளுமில்லை.

பொல்வத்தையின் வட பகுதியில் தூய நீருற்று ஒன்று இருந்தது. அயல்காணிக்காரர்கள் அந்த நீருற்றில் இருந்து நீண்டகாலமாக நீரை பெற்று வருகின்றனர். அவர்கள் மூன்று அடி நடை பாதை ஊடாக பொல்வத்தைக்கு சென்று நீருற்றை அடைந்து தமது வசிப்பிடத்திற்கு நீரைப்பெற்று வருகின்றனர்.

பொல்வத்த காணிக்கான பிரிவிடல் தீர்வை கோரி கினி 2022 ம் ஆண்டு கேகாலை மாவட்ட நீதிமன்றில் பிரிவிடல் வழக்கு நடவடிக்கை ஒன்றை தொடர்ந்தார்.

...நிகழ்வுகளின் முடிவு....

2. முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தான் குழப்பமடையாத, இடையூறற்ற மற்றும் முழுமையான உடைமையை கொண்டிருந்ததன் அடிப்படையில் பொல்வத்தை காணியின் முழுப் பகுதிக்கும் தான் உரித்துடையவர் என விளம்புமாறு எல்பஸ் கோருகிறார்.

எல்பஸ் தனது கோரிக்கை தொடர்பாக வெற்றியடைவாரா இல்லையா என்பது தொடர்பில் ஆராய்க. உமது விடையை பொருத்தமான தீர்ப்புச் சட்டத்துடன் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

3. தேவையான இடங்களில் பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தைக் குறிப்பிட்டு கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) செவருஸ் வீடு, சரக்கிருப்பு கட்டடம் மற்றும் இரண்டு பெரிய குழிகள் ஆகியவற்றிற்கு இழப்பீட்டை கோர உரித்துடையவரா என்பது தொடர்பில் அவருக்கு ஆலோசனை வழங்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) பொதுவான ஆதனம் மீதுள்ள கூட்டுச்சொந்தக்காரர்களின் உரிமை தொடர்பில் செவருஸிற்கு அறிவுறுத்துக.

(05 புள்ளிகள்)

4. லிலி என்பவருக்கு ஹரி என்பவர் நன்கொடையாக வழங்கிய பொல்வத்தை காணியின் 1/10 மடங்கு பகுதியைக் கொள்வனவுசெய்ய ஹெக்ரிட் என்பவரினால் அமர்த்தப்பட்ட நொத்தாரிசு லிலிக்குரிய பொல்வத்தை காணி மீது உரித்து தேடுதல் ஒன்றை மேற்கொண்டு பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகிறார்;

- நன்கொடை உறுதி (D1) 2014 செப்டம்பரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கைமாற்ற உறுதி (D2) ஆகஸ்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- பொல்வத்தை காணியின் விபரங்கள் உள்ளடங்கிய மூல மடிப்பு பக்கத்தை குறுக்கு குறிப்பு மேற்கொள்ளாது பிழையான மடிப்பு பக்கத்தில் கைமாற்ற உறுதி (D2) பதிவு செய்யப்பட்டுள்ளது.

D1 உறுதியை அடிப்படையாகக்கொண்டு லிலியுடைய பிரிபடாத பங்கிற்கு ஒரு நல்லுரித்தை ஹெகிரிட் பெற்றுக்கொள்வாரா என ஆராய்க.

பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்துடன் தொடர்புறுத்தி உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

5. அயல்காணிக்காரர்கள் நீருற்றை அடைவதற்கும் நீருற்றில் இருந்து ஒரு குழாய் ஊடாக தமது காணிகளுக்கு நீரைப் பெற்றுக்கொள்வதற்காகவும் ஒரு வண்டிப் பாதை ஒன்றை தாம் கோர முடியுமா என்பது தொடர்பில் உமது கருத்தை அறிந்துகொள்ள விரும்புகின்றனர். மேலும் பொல்வத்தையில் உள்ள நீருற்றில் இருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும் அயல்காணிக்காரரின் உரிமையை சவாலுக்கு உட்படுத்த கினி விரும்புகிறார்.

பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தைக் குறிப்பிட்டு இரு திறத்தவருக்கும் ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

6. "சட்டத்தின் கீழ் காணியொன்றின் உடைமையை ஒரு திறம் கோர முடியுமா இல்லையா என்பதை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக உரித்து தொடர்பில் விசாரணை ஒன்றை மேற்கொள்வது உடைமைசார் வழக்கு நடவடிக்கைகளில் பொருத்தமற்றது. உடைமைசார் வழக்கு நடவடிக்கை ஒன்றின் நோக்கமானது உரித்து தொடர்பான விடயத்தை தீர்ப்பளிப்பது... அன்றி, ஆயின் தமது சொந்த உரிமையில் ஆதனம் ஒன்றின் உரிமையாளராக (பௌதீக உடைமை) இருப்பதை கோரும் நபரை சட்ட நடவடிக்கைகளினால் அன்றி வேறுவகையில் ஆதனத்தில் இருந்து வெளியேற்றி உள்ள போது அந்த நபருக்கு விரைவான நிவாரணம் ஒன்றை வழங்குதல் ஆகும்."

*Edirisuriya* v.*Edirisuriya* (1975) 78 N.L.R 388p.393

மேலே தரப்பட்ட கூற்றின் பின்னணியில் உடைமைசார் நிவாரண வழக்கு நடவடிக்கை ஒன்றின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நுணித்து மதிப்பிடுக.
உமது வாதங்களை பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்துடன் ஆதாரப்படுத்துக.

7. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒரு மாணவர் ஆராய்ச்சி மாநாட்டில் "இலங்கை காணிச்சட்டத்தின் உண்மையான உடைமைகளின் விளைவுகளின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை நீர் சமர்ப்பிக்க விரும்புவதாக அனுமானிக்க. உமது வாதங்களை ஆதரித்து உமது கட்டுரையை பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களின் உதவியுடன் பின்வரும் உப தலைப்புகளின் கீழ் தயாரிக்குக.

(அ) உடைமை என்ற கோட்பாட்டின் வரைவிலக்கணம்

(08 புள்ளிகள்)

(ஆ) உடைமை என்ற கோட்பாட்டின் மன ரீதியான மற்றும் பௌதீக கூறுகள்

(12 புள்ளிகள்)

8. கீழே தரப்பட்ட தலைப்புகளில் இருந்து எவையேனும் **இரண்டு (02)** தொடர்பில் சிறுகுறிப்புகள் எழுதுக.

(அ) இல. 22, 1871 ம் ஆண்டு ஆட்சியுரிமை கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரிவு 3 இன் கீழ் உள்ள அடைப்புக்குறி வாசகம்

(ஆ) போலியன் வழக்கின் அத்தியாவசியமான திறத்தவர்கள்

(இ) விற்பனை செய்யப்பட்டு கையளிக்கப்பட்டமைக்கு விதிவிலக்கு (*Exceptio rei* venditae et traditae)

(ஈ) பதிவு மூலமாக முன்னுரிமையை இல்லாமல் ஆக்கும் காரணிகள்

ஒவ்வொரு பகுதிக்கும் 10 புள்ளிகள் வழங்கப்படும்
**(10x2=20** புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*